மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: வடார்க்காடு மாவட்டம்—3,121 ஏக்கர் 90 சென்ட். அரசாங்கம் இதில் ஒன்றும் எடுத்துக் கொள்ளவில்லை. தென்னாற்காடு மாவட்டத்தில் நிலமே இல்லை என்ற தகவல் இருக்கிறது. நான் குறிப்பிடுவதெல்லாம் 31-3-67-ல் செங்கற்பட்டு மாவட்டத்தில் 561 ஏக்கர் 1 செண்ட். அதில் 151 ஏக்கரா 75 செண்ட் அரசாங்கம் எடுத்திருக்கிறது. இதில் 50 ஏக்கரா உணவு உற்பத்திக்காக. கோயமுத்தூர் மாவட்டத்தில் 88 ஏக்கரா 40 சென்ட். தர்மபுரி மாவட்டத்தில் ஒன்றுமில்லை. கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒன்றுமில்லை. மதுரை மாவட்டத்தில் 4,954 ஏக்கரா 15 செண்ட். அதில் 89 ஏக்கரா 73 செண்ட் உணவு உற்பத்திக்காக. நீலகிரி மாவட்டத்தில் ஒன்றுமில்லை. இராமநாதபுரம் மாவட்டத்தில் 850 ஏக்கரா 96 சென்ட். சேலம் மாவட்டத்தில் 336 ஏக்கரா 72 சென்ட். இதில் அரசாங்கம் எடுத்தது 23 ஏக்கரா 2 செண்ட். தஞ்சாவூர் மாவட்டத்தில் 4,660 ஏக்கரா 45 செண்ட். இதில் அரசாங்கம் எடுத்தது 802 ஏக்கரா 72 செண்ட். திருச்சி மாவட்டத்தில் 30,792 ஏக்கரா 65 செண்ட். இதில் அரசாங்கம் எடுத்தது, 1068 ஏக்கரா 38 செண்ட். இதில் உணவு உற்பத்திக்காக 482 ஏக்கரா. திருநெல்வேலி மாவட்டத்தில் ஒன்றுமில்லை.

பூதான இயக்கம்

*245 வினா—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூதான இயக்கத்திற்கு சிதம்பரம் தாலுக்காவில் இதுவரை அளிக்கப்பட்ட நிலங்கள் எத்தனை ஏக்கர்?

(இ) அவை தற்போது யாருடைய பராமரிப்பில் இருக்கின்றன?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) 70 ஏக்கர் 24½ செண்ட்.

(இ) 65 ஏக்கர் 73½ செண்ட் நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு கொடையினை ஏற்றுக் கொண்டவர் வசம் அவை உள்ளன. 2 ஏக்கர் 95½ செண்ட் பரப்புள்ள நிலம் இன்னும் பகிர்ந்தளிக்கப்படவில்லை. எஞ்சிய 1 ஏக்கர் 55½ செண்ட் நிலம் ஈந்தோர் வசமே இன்னும் இருந்து வருகின்றன.

திரு. கே. விநாயகம் : சார், முதலில் இந்த அரசாங்கத்திற்கு பூதான இயக்கத்தில் நம்பிக்கை இருக்கிறதா? அப்படி நம்பிக்கையிருந்தால் ஏற்கனவே கொடுக்கப்பட்ட இந்த நிலங்களை இன்னும் அவர்களிடமே வைத்திருந்து எந்த விதப் பிரயோஜனமும் இல்லாமல் வீணாகப் போட்டிருக்கிறதே, அதை அரசாங்கம் ஏற்றுக் கொண்டு தகுதியுள்ளவர்களுக்கு—தகுதியுள்ளவர்கள் என்றால் ஏழைகளுக்குக் கொடுத்து அவர்களுக்கு உதவி செய்ய அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: நிலக்கொடை கொடுப்பவர்களிடமிருந்து பெற்றுக்கொள்வது தேவை என்று கருதுகிறது. ஆகவே கொடையை ஏற்றுக்கொள்ளும் முறையில் கொடுக்கப்பட்டிருக்கும் நிலங்களை இந்த அரசாங்கம் நிலமற்றவர்களுக்குக் கொடுக்குமா என்று கேட்பதிலிருந்து இதற்கு முன்னுவிருந்தவர்கள் நிலத்தையே பகிர்ந்து கொடுக்கவில்லையோ என்ற ஐயப்பாடு ஏற்படக்கூடும். ஆகவே இது வரையிலே நிலம் பெற்றிருப்பதை . . . .

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : நிலக் கொடை மூலம் அவர்கள் வைத்திருக்கும் நிலங்களை விதிமுறைகளின்படி பங்கிட்டுக் கொடுப்பதற்கு ஒரு குழு வைத்திருப்பதாக அறிகிறேன். சிலயிடங்களில் கொடுத்திருக்கிறார்கள். அந்த நிலங்களைப் பங்கிட்டுக் கொடுப்பதை சர்க்கார் ஏற்றுக் கொள்ள முடியுமா என்பது பரிசீலித்துப் பார்க்க வேண்டிய ஒன்று.

திரு. க. இராமமூர்த்தி: தலைவரவர்களே, இந்த பூதானத்தைப் பொறுத்தவரையில் பல ஊர்களில் பல தனிப்பட்ட நபர்களிடம் பூதானம் பெறும் நேரத்தில் இன்ன நிலம், இன்ன சர்வே நெம்பர்

என்று குறிப்பிடாமலும், பட்டாவையும் ஒன்றும் குறிப்பிடாமல் வெறும் பாரத்தில் கையெழுத்திட்டுக் கொடுக்கும்படி வாங்கிக் கொள்ளுகிறார்கள், பிறகு பட்டா எண், விஸ்தீரணம் முதலியவற்றைத் தாங்களாகவே கிராமக் கர்ணம் மூலமாகப் பூர்த்தி செய்து நடவடிக்கை எடுத்ததால் பல தனியார்கள் இதை ஆட்சேபித்துக் கோர்ட்டுக்குப் போயிருக்கிறார்கள். அதன் காரணமாகப் பூதான இயக்கத்தின் மீதும் நம்பிக்கையில்லாத நிலைமையும் இன்று ஏற்படுகிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன். அப்படி வந்திருந்தால் அரசாங்கம் இனி என்ன முறையைக் கையாளலாம் என்று உத்தேசித்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அரசாங்கத்திற்கு இதைவிட இன்னும் சில தகவல்கள்கூடத் தெரியும். இந்த நிலம் யாரிடத்திலே இருந்தால் என்ன என்று சொல்லத்தக்க நிலையிலுள்ள நிலங்களைக் கொடுத்திருக்கிற கதைகளெல்லாம் தெரியும். அவைகளிலே சர்க்கார் எந்த அளவுக்கு ஈடுபட முடியும் என்பது பரிசீலித்துப் பார்க்க வேண்டிய ஒன்று.

ஊர்க்காவல் படை

***236 வினா.—திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊர்க்காவல்படை என்ற பிரிவினை அரசு மேலும் செயல்படுத்துமா?

(இ) ஆம் எனில் அதன் இன்றியமையாமைக்குக் காரணம் என்ன ?

(உ) இதற்கென ஆண்டொன்றுக்கு ஆகும் செலவென்ன?

மாண்புமிகு திரு. சி என். அண்ணாதுரை : (அ) ஆம்.

(இ) நாட்டிற்கு இன்னலும் ஆபத்தும் நேர்ந்தபோது அவற்றை அஞ்சாது எதிர்த்து நிற்கும் நெஞ்சுரத்தை மக்களுக்கு அளித்து உற்ற தருணத்தில் உறுதுணையாக விளங்குகின்றது ஊர்க்காவல் படை. பொது அமைதியைக் காப்பதிலும் மக்களுக்கும் அவர் தம் உடமைகளுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கும், இப்படை போலீஸ் படைக்குத் துணை புரிகின்றது. அவசரக் காலங்களில் சமுதாயத்திற்கு உதவி புரிவதிலும் நாட்டின் பாதுகாப்புப் படைகளுடன் இணைந்த செயல்களை மேற்கொள்வதிலும் இப்படை பெரும் பங்கு வகிக்கின்றது.

(உ) 1965–66-ல் இப்படைக்கான செலவு ஏறக்குறைய ரூ. 7,60,000 ஆகும்.

திரு. பி. எஸ். மணியன் : தலைவரவர்களே, தற்சமயம் சீரணிப்படை நல்லமுறையிலே தோற்றுவிக்கப்பட்டிருப்பதால் ஊர்க்காவல் படையின் செலவுகளைக் குறைக்கும் முறையில் சீரணிப்படைக்கு ஊர்க்காவல் படையின் பொறுப்பைத் தரும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை. ஏனென்றால் ஊர்க்காவல் படையின் பணியும், சீரணிப்படையின் பணியும் வெவ்வேறானவை.

Dr. H. V. HANDE : Sir, in view of the fact that there is a serious possibility of our N.C.C. not functioning—I hope it will function properly in spite of the controversy between the Centre and the State—in view of this danger, will this Government give greater importance to Home Guards, increase the number of Home Guards and give them full military training ? I think partial military training is now given. Will the Government give